

தலைமைச் செயலகத்தில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில், நேற்று முன்தினம் (24.06.2024) – 2024–2025 ஆம் ஆண்டிற்கான கூட்டுறவுத் துறையின் வரைவு கொள்கை விளக்க குறிப்பு மற்றும் அறிவிப்புகள் மற்றும் துறையின் செயல்பாடுகள் குறித்து ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை கூடுதல் தலைமைச்செயலாளர் டாக்டர்.கே.கோபால், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் டாக்டர்.ந.சுப்பையன், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) திருமதி ஜெ.விஜயராணி, ஆகியோர் கலந்து கொண்டனர்.

### எளிய மக்களின் நல வாழ்வில் அக்கறை கொண்ட

# மனிதநேய மருத்துவர் பெ.குகானந்தம் மறைவு ஈடுசெய்ய முடியாதது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, ஜீன் 26 -**

**மருத்துவர் பெ.குகானந்தம் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு: -**

பெருநகர சென்னை மாநகராட்சியின் மாநகர நல அலுவலராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவரும் சிறந்த மருத்துவச் சேவையாற்றியவருமான மருத்துவர் பெ. குகானந்தம் அவர்கள் நுரையீரல் தொற்று காரணமாக தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி மறைவெய்தினார் என்ற செய்தியறிந்து மிகவும் வருத்தமுற்றேன்.

மருத்துவம் என்பது மிக உன்னதமான மனிதம் போற்றும் துறை என்பதற்கான சான்றாக தம் வாழ்நாள் முழுவதும், அத்துறையில் அளப்பரிய சேவைகளை ஆற்றி வந்தவர் மருத்துவர் குகானந்தம் அவர்கள். சென்னை நகரின் மேயராக நான் இருந்த காலத்தில், சென்னை மாநகரச் சுகாதார அலுவலராகப் பணியாற்றிய மருத்துவர் திரு. குகானந்தம் அவர்கள், மாநகர மக்களின் நலவாழ்வை மேம்படுத்துவதற்கான பல்வேறு ஆலோசனைகளையும், களப் பணிகளையும் எனக்கு உறுதுணையாக இருந்து ஆற்றியவர்.

அரசுப் பள்ளியில் படித்து மருத்துவராக உயர்ந்த எளிய பின்புலத்தைக் கொண்டவர் என்பதால், தம் வாழ்நாள் முழுக்க எளிய மக்களின் நலவாழ்வில் அக்கறை கொண்டவராகவும், அவர்களுக்காக பாடுபடுவதில் ஆர்வம் கொண்டவராகவும் அவர் திகழ்ந்தார்.

சென்னை மீதும், அந்த மண்ணின் எளிய மக்கள் மீதும் அளப்பரிய நேசத்தைப் பொழிந்த மருத்துவர் திரு. குகானந்தம் அவர்கள், சென்னை சுகாதாரமான நகரமாகவும், சுகவாழ்வுக்கான வசிப்பிடமாகவும் திகழ வேண்டும் என்பதில் தீராத வேட்கை கொண்டவராகத் திகழ்ந்தார். குறிப்பாக, குடிசைவாழ் மக்களின் நலவாழ்வில் எப்போதுமே தனி அக்கறை கொண்டவராகச் செயல்பட்டு வந்தார்.

அதற்கேற்ப, பெருநகர சென்னை மாநகராட்சியில் உதவி சுகாதார அலுவலராக பணியாற்றிய போது, எளிய மக்களின் நலவாழ்வுக்காக அயராது பாடுபட்ட மருத்துவர் திரு. குகானந்தம் அவர்கள், தண்டையார்பேட்டை தொற்றுநோய் மருத்துவமனை இயக்குநராகப் பணியாற்றிய காலத்தில், அந்த மருத்துவமனையின் கட்டமைப்பையும், தரத்தையும் மேம்படுத்த பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு, ஏழை, எளிய மக்களின் உயிர்காக்கும் மையமாக அதனை மாற்றினார்.

1992 - 1993 காலக்கட்டத்தில் சென்னையில் காலரா நோய் பரவிய போது, எளிய மக்களை அந்நோயில் இருந்து காப்பாற்றுவதற்கான செயல்திட்டங்களுடன், சிறப்பான களப்பணியை ஆற்றியவர்.

அதனைத் தொடர்ந்து மாநகர நல அலுவலராகவும் சிறந்த மருத்துவம் மற்றும் சுகாதார சேவைகளை வழங்கிப் பணியாற்றி 2014ஆம் ஆண்டு ஓய்வு பெற்றுள்ளார்.

அரசுப் பணியில் இருந்து ஓய்வு பெற்றாலும், தமது மருத்துவத் தொண்டில் இருந்து அவர் ஒருபோதும் ஓய்வு பெறவில்லை. கொரோனா காலத்தில் அரசு அமைத்த சிறப்பு ஆய்வுக்குழுவில் பங்கேற்ற அவர், காலரா, டெங்கு உள்ளிட்ட தொற்றுநோய்த் தடுப்பில் தமக்கிருந்த அனுபவத்தைப் பயன்படுத்தி, மக்களை அப்பேரிடரில் இருந்து மீட்கப் பேருதவியாக இருந்தார்.

இத்தனை சிறப்பு வாய்ந்த இணையற்ற மனிதநேய மருத்துவரான மருத்துவர் திரு. குகானந்தம் அவர்களின் மறைவினால் வாடும் அவரது துணைவியார், குடும்பத்தினர், உறவினர்கள், மருத்துவத்துறை சார்ந்த சக நண்பர்கள் மற்றும் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### முதலமைச்சரின் கோரிக்கையை ஏற்று – அ.தி.மு.க.வினர்

# இன்று ஒருநாள் மட்டும் பேரவையிலிருந்து நீக்கம்!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு அறிவிப்பு!

**அமைச்சர் கே.என். நேரு:** பிரதான எதிர்க்கட்சியாக இருக்கிற அ.தி.மு.க.வினர் நம்முடைய முதல்வர் அவர்கள் சொன்னதைப்போல, வேண்டுமென்றே திட்டமிட்டு, இந்த சபையினுடைய நடவடிக்கைக்கு குந்தகம் விளைவித்து, அதன்மூலமாக ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக வெற்றியை மறைப்பதற்காக ஒரு நாடகம் ஆடிக்கொண்டிருக்கிறார்கள். எங்களுக்குத் தெரியும், ஏற்கெனவே அவைத் தலைவராக இருந்தவர் அங்கு இருக்கிறார். கடந்த காலத்தில் எழுந்து நின்று பேச முற்பட்டால், உடனடியாக அமருங்கள், கேள்வி நேரம் முடிந்த பிறகுதான் என்று சொல்லி, எங்களைப் பார்க்கவே மாட்டார் அந்த சபாநாயகர். நீங்களாவது அவர்களைப் பார்த்து சிரித்து பேசி, அவர்கள் சொன்னதைக் கேட்டு, ஒரு நடுநாயகமாக (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சபையை நடத்திக்கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்கே, அவர்கள் நீங்கள் சொல்வதையும் கேட்காமல், தொடர்ந்து அன்றைக்கு அவர்களை வெளியேற்றிய பிறகு, முதலமைச்சர் அவர்கள் பெருந்தன்மையோடு அவர்களை மீண்டும் அழைக்க வேண்டும், அவையில் அவர்கள் உரையாற்ற வேண்டுமென்ற எண்ணத்தோடு, அவர்களை திருப்பி அழைத்தபோது, மீண்டும் அவர்கள் அதே தவறுகளை செய்கிறார்கள். எனவே, அவர்கள் கடந்த காலத்தில் எப்படி நடந்துகொண்டார்கள் என்பது எங்களைப்போன்று இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்களுக்கு நன்றாகத் தெரியும். எள்முனையளவுகூட அவர்களிடம் ஜனநாயகம் இருக்காது. ஆனால், இன்றைக்கு ஜனநாயகத்தோடு நடைபெறுகிற இந்த அவையை சீர்குலைக்க அவர்கள் முற்பட்ட காரணத்தால், பேரவையின் அலுவல்களை நடைபெற விடாமல் இடைமறித்தும், பேரவையின் விதிகளுக்கு மாறாக அவையில் குந்தகம் செய்து வருவதாலும், சட்டமன்றப் பேரவை விதி 121, உள்விதி (2)ன்கீழ், இன்றைக்கு அவைக்கு வருகைதந்து, கலவரத்தில் ஈடுபட்ட நபர்களை மட்டும், இந்தக் கூட்டத்தொடர் முழுவதும் suspend செய்ய வேண்டுமென்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின்:** நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கூறியதிலிருந்து நான் கொஞ்சம் மாறுபடுகிறேன். கூட்டத் தொடர் முழுவதும் தேவையில்லை. இன்றைக்கு மட்டும் நீக்கி வைத்துவிட்டு, மறுபடியும் அவர்களுக்கு ஒரு வாய்ப்புத் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**பேரவைத் தலைவர்:** முதலமைச்சர் அவர்களுடைய கோரிக்கையை மனதில் வைத்து நகராட்சி நிர்வாகத் துறை அவர்கள் தீர்மானத்தை மாற்றி வாசிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் கே.என். நேரு:** முதல்வர் அவர்கள், 'அ.இ.தி.மு.க. உறுப்பினர்களை கூட்டத்தொடர் முழுவதும் பேரவைப் பணிகளினின்று நீக்கி வைக்கத் தேவையில்லை; இன்றைக்கு மட்டும் நீக்கி வைத்தால் போதும்' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையிலேயே தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

இதையடுத்து பேரவைத் தலைவர் தீர்மானத்தை அவையில் குரல் வாக்கெடுப்புக்கு விடப்பட்டு அத் தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களில் அவை நடவடிக்கைகளில் இன்று கலந்துகொண்டு, கோஷமிட்டு, அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கின்ற வண்ணம் செயல்பட்ட அனைவரும் இன்று ஒருநாள் மட்டும் பேரவைப் பணிகளினின்று நீக்கி வைக்கப்படுகின்றார்கள். பெருந்தன்மையோடு நடந்துகொண்ட முதல்வர் அவர்களுக்கு உங்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சட்டப் பேரவை நிகழ்ச்சி**
**25.06.2024**

### பா.ஜ.வுக்கு மெஜாரிட்டி இல்லாததால்

# நாடாளுமன்றத்தில் போர் காட்சிக்கு பஞ்சம் இருக்காது!

## 'தினகரன்' தலையங்கத்தில் கருத்து!

சென்னை, ஜூன் 26-

பா.ஜ. மெஜாரிட்டி இல்லாமல் ஆட்சி அமைத்திருப்பது குறித்து 'தினகரன்' நாளேடு நாடாளுமன்றத்தில் போர் காட்சிக்கு பஞ்சம் இருக்காது என தலையங்கத்தில் கருத்து தெரிவித்துள்ளது.



தினகரன்
ஜூன் 25, 2024 செவ்வாய்க்கிழமை
ஆரம்பமே அமர்க்களம்

நாடாளுமன்ற தேர்தலில் பாஜ கூட்டணி 293 இடங்களை கைப்பற்றியது. இதில் பா.ஜ மட்டும் 240 இடங்களை கைப்பற்றியது. காங்கிரஸ் உள்ளிட்ட இந்தியா கூட்டணி 234 தொகுதிகளில் வெற்றி பெற்று இருந்தது. இதில் காங்கிரஸ் கட்சி மட்டும் 99 இடங்களை பெற்று இருந்தது. புதிய ஆட்சி அமைக்க தேவையான 272 இடங்கள் எந்த கட்சிக்கும் கிடைக்கவில்லை. பா.ஜனதா தனித்து 240 இடங்கள் மட்டுமே பெற்றதால் மத்தியில் கூட்டணி ஆட்சியாக அமைந்தது பாஜ தலைவர்கள் மத்தியில் கசப்பை ஏற்படுத்தியது.

ஒன்றிய அமைச்சரவை பதவியேற்று 24 மணி நேரம் கழித்து அமைச்சர்களுக்கான இலாகா ஒதுக்கப்பட்டது. இதில் கூட்டணி கட்சிகளுக்கு முக்கியத்துவம் வாய்ந்த இலாகாக்கள் ஒதுக்கப்படவில்லை என்பது கூட்டணி கட்சியினர் மத்தியில் சலசலப்பை ஏற்படுத்தியது. இந்நிலையில் புதிய சபாநாயகர், துணை சபாநாயகர் தேர்வு குறித்து

அது வருமாறு :-

நாடாளுமன்ற தேர்தலில் பாஜ கூட்டணி 293 இடங்களை கைப்பற்றியது. இதில் பா.ஜ மட்டும் 240 இடங்களை கைப்பற்றியது. காங்கிரஸ் உள்ளிட்ட இந்தியா கூட்டணி 234 தொகுதிகளில் வெற்றி பெற்று இருந்தது. இதில் காங்கிரஸ் கட்சி மட்டும் 99 இடங்களை பெற்று இருந்தது. புதிய ஆட்சி அமைக்க தேவையான 272 இடங்கள் எந்த கட்சிக்கும் கிடைக்கவில்லை. பா.ஜனதா தனித்து 240 இடங்கள் மட்டுமே பெற்றதால் மத்தியில் கூட்டணி ஆட்சியாக அமைந்தது பாஜ தலைவர்கள் மத்தியில் கசப்பை ஏற்படுத்தியது. ஒன்றிய அமைச்சரவை பதவியேற்று 24 மணி நேரம் கழித்து அமைச்சர்களுக்கான இலாகா ஒதுக்கப்பட்டது.

இதில் கூட்டணி கட்சிகளுக்கு முக்கியத்துவம் வாய்ந்த இலாகாக்கள் ஒதுக்கப்படவில்லை என்பது கூட்டணி கட்சியினர் மத்தியில் சலசலப்பை ஏற்படுத்தியது. இந்நிலையில் புதிய சபாநாயகர், துணை சபாநாயகர் தேர்வு குறித்து இன்னும் ஒருமித்த கருத்து ஏற்படவில்லை. கடந்த காலங்களில் மக்களவை சபாநாயகர்கள் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டுள்ளனர். துணை சபாநாயகர் பதவியை எதிர்க்கட்சிக்கு விட்டு கொடுத்தால் கருத்தொற்றுமை அடிப்படையில் சபாநாயகர் தேர்வு செய்து கொள்ளலாம் என இந்தியா கூட்டணி தெரிவித்துள்ளது. இது நடக்காத பட்சத்தில் தேர்தல் மூலம் தேர்வு செய்வது தவிர்க்க முடியாததாகும்.

இதையடுத்து, நாடாளுமன்ற புதிய மக்களவை சபாநாயகரை தேர்வு செய்வதற்காக நேற்று சிறப்பு கூட்டத்தொடர் தொடங்கியது. புதிய சபாநாயகர் தேர்வு நாளை நடைபெறுகிறது. இந்நிலையில், மக்களவை தற்காலிக சபாநாயகராக பர்த் ருஹரி மஹ்தப்பை குடியரசு தலைவர் திரவுபதி முர்மு நியமித்து உத்தரவிட்டுள்ளார். ஒடிசா மாநில பா.ஜ. எம்.பி.யான இவர், நேற்று முதல் புதிய எம்பிக்களுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்து வருகிறார். கூட்டத்தொடர் துவங்கிய முதல் நாளிலேயே நாடாளுமன்ற வளாகத்தில் இருந்த காந்தி சிலையை இடமாற்றம் செய்ததை கண்டித்து அரசியல் சாசன புத்தகத்தை கைகளில் ஏந்தி இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் நேற்று போராட்டம் நடத்தினர்.

இதில் சோனியா காந்தி உள்ளிட்ட கூட்டணி கட்சியினர் கலந்து கொண்டனர். இதற்கிடையில் உறுதிமொழி ஏற்க வருமாறு தற்காலிக சபாநாயகர் விடுத்த அழைப்பை மூத்த எம்பிக்களான கொடிக்குன்னில் சுரேஷ், டி.ஆர்.பாலு ஆகியோர் நேற்று நிராகரித்தனர். முதல் நாளிலேயே மோடி அரசுக்கு இந்தியா கூட்டணி நெருக்கடி கொடுத்துள்ளது. தற்போது நீட் முறைகேடு விவகாரம் நாடு முழுவதும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளது. முறைகேடு குறித்து சி.பி.ஐ. விசாரணை தொடங்கி உள்ளது. ஏற்கனவே சமீபத்தில் ரத்து செய்யப்பட்ட யு.ஜி.சி. நெட் தேர்வு முறைகேடு தொடர்பாக சி.பி.ஐ. விசாரித்து வரும் நிலையில் நீட் முறைகேடுகள் குறித்தும் விசாரணை நடத்துகிறது. தொடர்ந்து கடைசி நேரத்தில் நீட் முதுகலை நுழைவு தேர்வு ஒத்திவைக்கப்பட்டதால் வினாத்தாள் கசிந்ததா என்பதும் சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளது.

அதோடு ஒட்டுமொத்த எதிர்க்கட்சிகளும் எதிர்ப்பு தெரிவித்துள்ள புதிய 3 குற்றவியல் சட்டங்கள் ஜூலை 1ம் தேதி முதல் அமலுக்கு வர உள்ளன. புதிய சட்டங்களையும் நடைமுறைப்படுத்தாமல் நிறுத்தி வைக்க வேண்டும் என்று ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவுக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார். இதுபோன்று காங்கிரஸ் உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சிகளும் எதிர்ப்பு தெரிவிக்கின்றன. விலைவாசி உயர்வு, அதிகரிக்கும் ரயில் விபத்துகள் என அரசுக்கு எதிராக பல்வேறு விவகாரங்கள் இருப்பதால் புதிய ஆட்சியின் முதல் கூட்டத்தொடர் கடும் அமளிகளுடன் ஆரம்பிக்கும். பாஜவுக்கு தனி மெஜாரிட்டி இல்லாததால் இனி நாடாளுமன்றத்தில் போர் காட்சிக்கு பஞ்சம் இருக்காது.

இவ்வாறு 'தினகரன்' நாளேடு கருத்து தெரிவித்துள்ளது.


### ஓய்வு பெற்ற

# நீதிபதி கே.சந்துரு குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுக!

## தமிழ்நாடு அரசுக்கு வைகோ வேண்டுகோள்!

சென்னை, ஜூன் 26 -

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



மாணவர்களிடம் சாதிய உணர்வுகளை அகற்றி சமத்துவமும், தோழமையும் கொண்டு அவர்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் காண வேண்டும் என்ற நோக்கத்தோடு தமிழ்நாடு அரசு ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி கே.சந்துரு அவர்கள் தலைமையில் ஒரு குழுவினை நியமித்தது.

பல்வேறு அரசியல் கட்சிகள், சமூக இயக்கங்கள், பொதுநல அமைப்புகள் ஆகியவைகளிடம் இது தொடர்பான கருத்துக்களை பெற்றும், பிரச்சினைக்குரிய பகுதிகளுக்கு நேரடியாக சென்று கள ஆய்வு செய்தும் மாணவர்களிடையே சகோதரத்துவ உணர்வை வளர்ப்பதற்கான கருத்துக்களை பரிந்துரைகளாக இந்தக்குழு தயாரித்து அதனை முறைப்படி தமிழ்நாடு அரசின் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் வழங்கி உள்ளது.

கல்வி நிலையங்களிலும், மற்ற பிற இடங்களிலும் சாதிகளின் பெயரால் பகை ஏற்பட்டு அதன் விளைவாக வன்முறை சம்பவங்கள் நடந்து கலவர பூமியாக தமிழ்நாடு மாறிவிடாமல் தடுப்பதற்கான நல்ல முயற்சியாக இந்தக் குழுவின் பரிந்துரைகள் அமைந்துள்ளதை வரவேற்று, அவைகளை செயல்படுத்தி தமிழகத்தை சமத்துவ பூமியாக மாற்றி அமைத்திட தமிழ்நாடு அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### விக்கிரவாண்டி இடைத்தேர்தல்!

# தி.மு.க. வேட்பாளரை ஆதரித்து ம.ஜ.க. சார்பில் தேர்தல் பணிக்குழு!

## ம.ஜ.க. தலைவர் மு. தமிமுன் அன்சாரி அறிவிப்பு!

சென்னை, ஜூன் 26-

விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதியில் நடைபெறும் இடைத்தேர்தலில் தி.மு.க. தலைமையிலான கூட்டணி சார்பில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவாவின் வெற்றிக்கு மனிதநேய ஜனநாயக கட்சியின் சார்பில் தீவிரமாக களப்பணியாற்றுவது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

அதன் அடிப்படையில் கீழ்க்கண்ட ம.ஜ.க. தேர்தல் பணிக்குழு ஒன்றும் அமைக்கப் படுகிறது.

பணிக்குழு தலைவராக மாநில செயலாளர் எ. ஷஃபி



(8248986701) அவர்களும், துணைத் தலைவராக மாநிலச் செயலாளர் கலைக்குயில் இப்ராஹிம் அவர்களும் நியமிக்கப்படுகிறார்கள்.

இக்குழுவில் மாநிலச் துணைச் செயலாளர் பேரா. அப்துல் சலாம் (750 2255457) அவர்களும், மாநில சுற்றுச் சூழல் சேவை அணிச் செயலாளர் டெல்டா. ஹமீது ஜெகபர் (9486839505) அவர்களும் இடம் பெறுவர்.

இதன் துணைக்குழுவில், விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் பாட்ஷா, விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர் முகமது ரிஸ்வான், கடலூர் வடக்கு மாவட்டச் செயலாளர் மன்சூர் ஆகியோரும் இடம் பெறுவர்.

இதில் ம.ஜ.க.வின் முன்னணி செயல்வீரர்கள் கொண்ட தனித்தனி களப்பணிக் குழுக்கள் அமைக்கப்பட்டு பரப்புரைகளில் ஈடுபடுவார்கள்.

இக்குழு தி.மு.க. தலைமையிலான கூட்டணி தோழர்களோடு இணைந்து பணியாற்றும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன் என்று மனிதநேய ஜனநாயகக் கட்சித் தலைவர் மு.தமிமுன் அன்சாரி தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



பீளமேடு பகுதி2, வார்டு எண்:28 ஆவாரம்பாளையம், தெற்கு வீதி,படாளம்மன் கோவில் வீதி பகுதிகளில் கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா.கார்த்திக், கோவை மாநகர் மாவட்ட இளைஞர் அணி சார்பில் கோவை மாநகர் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் இரா.தனபால் மேற்பார்வையில்,பீளமேடு பகுதி 2 செயலாளர் மா.நாகராஜ் தலைமையில், 28 வது வட்டக் கழகச் செயலாளர் ப.மோகன்ராஜ் முன்னிலையில் இல்லந்தோறும் இளைஞர் அணிஉறுப்பினர் சேர்க்கை முகாம் நடைபெற்றது. மாநகர் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் லாராபிரேம்தேவ், க.மணிகண்டன், கோவை அருண், துரைபிரவீன், இப்னு மகூது, வட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஜே. தாஸ், பீளமேடு பகுதி 2 ஆவைசதீஷ், மாவட்ட பிரதிநிதி கேபிள் சேகர், அவைத் தலைவர் வேலுச்சாமி, துணைச் செயலாளர் நாராயணசாமி, பிரதிநிதிகள் எஸ்.டி.சரவணன், கந்தசாமி, ஆர்.கே.பாலு, ரவி, ரங்கநாதன், சுரேஷ் குமார், பிரகாஷ், ராமச்சந்திரன், சௌந்தர், பாபு, டேனியல் நடராஜ், அசோக் குமார் ஈஸ்வரன், கோபி, மூர்த்தி, கழக நிர்வாகிகள், கழக உடன்பிறப்புக்கள் கலந்து கொண்டனர்.

### கோவையில் சர்வதேச தரத்திலான கிரிக்கெட் மைதானம்–

# ஜி.டி. நாயுடுவுக்கு சிலை – முதல்வருக்கு நன்றி!

## மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் அறிக்கை!

கோவை, ஜூன் 26-

கோவை மாவட்டம், சிங்காநல்லூர் தொகுதி, ஒண்டிப் புதூரில்,"சர்வதேச தரத்திலான கிரிக்கெட் மைதானம்", கோவையில் அறிவியல் மேதை அதிசய விஞ்ஞானி ஜி.டி.நாயுடு அவர்களுக்கு 50 இலட்சம் ரூபாயில் திருவுருவச் சிலை, முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணிச் செயலாளர், தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, தமிழ்நாடு சட்டமன்றத்தில், தமிழ்நாடு அரசு அறிவித்ததற்கு,

கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா.கார்த்திக் முன்னாள் எம்எல்ஏ., நன்றி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணிச் செயலாளர், தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் உத்தரவிற்கிணங்க, கோவை மாநகர் மாவட்டம், சிங்காநல்லூர் தொகுதி, ஒண்டிப்புதூரில் 20.72 ஏக்கர் நிலத்தில், "சர்வதேச தரத்திலான கிரிக்கெட் மைதானம்" அமைக்கும் முடிவிற்கு ஒப்புதல் வழங்கியமைக்கும்,



கோவையில் அறிவியல் மேதை அதிசய விஞ்ஞானி ஜி.டி.நாயுடு அவர்களுக்கு 50 இலட்சம் ரூபாயில் திருவுருவச் சிலை அமைக்கப்படும் என தமிழ்நாடு சட்டமன்றத்தில் தமிழ்நாடு அரசு அறிவித்ததற்கு,

திராவிட மாடல் அரசின் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கும்,

இளைஞர்களின் இதய ஏந்தல், இளைஞர்களின் நம்பிக்கை நட்சத்திரம்,

கழக இளைஞரணிச் செயலாளர், தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி!

கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பிலும்,கோவை மாவட்ட பொதுமக்கள், இளைஞர்கள், இளம்பெண்கள், கிரிக்கெட் விளையாட்டு வீரர்கள், கிரிக்கெட் விளையாட்டு ரசிகர்கள் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு நா.கார்த்திக் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.